DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 243/2024

Prosecution Witness -P.W. 14

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. கிளாஸ்டின் ஜெயகுமார் |
| Father's Name | : | P. தேவராஜ் |
| Village | : | முள்ளங்கினாவிளை |
| Taluk | : | கிள்ளியூர் |
| Calling | : | HC 1656 தலைமை காவலர் |
| Age | : | 58 |
| Date | : | 24.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.09.2025.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

24.09.2025

**முதல் விசாரணை:-**

நான் தற்போது மார்த்தாண்டம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். 27.11.2023 அன்று பளுகல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது காவல் நிலைய குற்ற எண். 94/2023 பிரிவு 302, 380 இ.த.ச. வழக்கில் இறந்துபோன தங்கையன் மகன் ஜேம்ஸ் என்பவரின் உடல் குழித்துறை அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது. அதற்கு பாதுகாப்பு அலுவல் செய்ய காவல் நிலையத்தில் என்னை நியமித்தார்கள். அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு

குழித்துறை பொது அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு சென்று ஜேம்ஸ் என்பவரின் உடலை அடையாளம் கண்டு பாதுகாப்பு பணியில் இருந்தேன். காலை 6.45 மணிக்கு ஆய்வாளர் வந்தார். அவரிடம் உடலை அடையாளம் காட்டினேன். அவர் காலை 7 மணி முதல் 9 மணி வரையில் பிரேத விசாரணை நடத்தினார். அதற்கு உதவியாக இருந்தேன். பிரேத விசாரணை முடிந்த பின் உடலை பிரேத பரிசோதனை செய்வதற்கு அரசு மருத்துவ கல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் ஒன்றை ஆய்வாளர் கொடுத்தார். அதை பெற்றுக்கொண்டு சடலத்துடன் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவரிடம் ஒப்படைத்தேன். அவர்கள் அதை பெற்றுக்கொண்டு ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் உள்ள ஒரு பதிவேட்டில் PM No. 1313/2023 என பதிவு செய்து காலை 11.15 மணிமுதல் 12.15 மணி வரையில் பிரேத பரிசோதனை செய்தார். அதற்கு மருத்துவருக்கு நான் உதவியாக இருந்தேன். பிரேத பரிசோதனை முடிந்தபிறகு பிரேதத்தை அவருடைய மகன் ஜெகனிடம் ஒப்படைத்தேன். ஜேம்ஸின் உடலை பிரேத பரிசோதனை செய்தபோது அவர் உடுத்திருந்த வெள்ளை மற்றும் கருநீல கலரில் சிறு சிறு கட்டம்போட்ட லுங்கி ஒன்றை மருத்துவர் என்னிடம் கொடுத்தார். அதை நான் 6, 6.30 மணிக்கு கொண்டு சென்று நிலையத்தில் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 18 லுங்கி அப்போது என்னிடம் கொடுக்கப்பட்டதுதான். பிரேத பரிசோதனை செய்யும்போது சேகரித்த உள்ளுறுப்புகளை 08.01.2024 அன்று வட்டார தடய அறிவியல் ஆய்வகம், திருநெல்வேலியில் கொண்டு ஒப்படைத்தேன். அவருடைய உடலிருந்து

கைப்பற்றப்பட்ட இரத்த மாதிரியை மூடி முத்திரையிடப்பட்ட காகித உறை ஒன்று 12.01.2024 அன்று வட்டார தடய அறிவியல் ஆய்வகம், திருநெல்வேலியில் ஒப்படைத்தேன். அதற்கான ரசீதை பெற்று நிலையத்தில் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-**

என்னை எந்த ஆய்வாளர் விசாரித்தார் என்றால் ஆய்வாளர் காளியப்பன் விசாரித்தார். நான் சொல்வது போல சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த பணியிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் பல பணி நிலைகளை காண்பிப்பதற்காக என்னை சாட்சியாக ஜோடித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என்னை யாரும் விசாரிக்கவும் இல்லை என்றாலும் சரியல்ல.